1972 ஏப்ரல் 1]

வதற்குமான நகராட்சியின் தீர்மானம் ஒன்று நகராட்சியிடமிருந்து கோரப் பட்டுள்ளது. தீர்மானம் கிடைக்கப் பெற்றபின் ஆய்வுக்கான மதிப்பிட்டிற் கான ஒப்பளிப்பு வழங்கப்படும்.

திரு சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, நகராட்சியிடமிருந்து தீர்மானத்தை எதிர்பார்ப்பதாக முதலமைச்சரவர்கள் கூறினர்கள். நகராட்சி தீர்மானத்தை விரைவில் போட்டுக்கொடுத்தால் அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: தீர்மானம் நகராட்சியிடமிருந்து வந்ததும் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த நகராட்சிகளுக்காவது பாதாள சாக்கடை அமைத்துக்கொடுக்க அரசு ஏதாவது துரிதமாக திட்டம் அமைத்து, இப்பொழுது 72-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் எலக்ட்ரிசிட்டி கொடுக்க வேண்டுமென்று இருப்பதைப்போல், எல்லா முனிசிபாலிட்டிகளிலும் பாதாள சாக்கடை அமைக்க வேண்டுமென்ற திட்டம் ஏதாவது இருக்கிறதா? நகராட்சி தீர்மானம் போடுகிறதோ இல்லையோ உடனுக்குடன் பாதாள சாக்கடை அமைக்க அரசாங்கம் அதிகாரமும், பணமும் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: அதற்காகவேதான் குடிநீர்வாரியம் அமைக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக இந்த முயற்சி முற்றுப் பெற வேண்டுமென்ற அடிப்படையில் பணி நடைபெறுகிறது. நகராட்சி தீர்மானம் போடுகிறதோ இல்லையோ என்று கூறிவிடுவது நல்லதல்ல. ஏனென்றல் நகராட்சிகளுக்கும் அதில் பொறுப்பு இருக்க வேண்டும். நகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பிலே இருக்கின்றவர்கள் அரசாங்கம் முயற்சியெடுத்துச் செய்யும் நேரத்தில் ஒத்துழைப்பு கொடுத்தால் காரியம் விரைவில் முடிவதற்கு ஏதுவாக இருக்கும்.

தோவாளை வட்டத்துக்கு குடிநீர்த்திட்டம்

*** 816 வினு—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திலுட்பட்ட உலக்கையருவியில் விழும் தண்ணீரை அணைக் கட்டி தேக்கி தோவாளை, அகஸ்தீஸ்வரம் தாலுக்காக்களுக்கு குடிதண்ணீர் வினியோகம் செய்வதற்காக தோவாளை ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ஆய்வுக்கட்டணமாக (Investigation Charges ரூ. 26,000 செலுத்தி வெகு நாட்களாகியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தோவாளை ஊராட்சி ஒன்றியம், குடிநீர் திட்டத்திற்கான ஆய்வுத் தொகை ரூபாய் 26,000-ஐ 6——1971 அன்றுதான் செலுத்தியுள்ளது. மேற்கண்ட பஞ்சாயத்துக்கு குடிநீர் வழங்க ஆய்வு வேலைகள் தொடக்க நிலையில் உள்ளன. வாரிய களப்பணி அலுவலர்கள் (Field Officers) உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய ஆயுள் காப்பீட்டுக் கழக குடிநீர் திட்டங்களுக்கான வேலைகளில் முனைந்து ஈடுபட்டுள்ளனர். எனினும் தோவாளை பஞ்சாயத்து குடிநீர் ஆய்வு வேலைகள் இயன்ற அளவு விரைவினில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை: தலைவரவர்களே, இந்த உலக்கையருவியில் அணைகட்டுவதால் குமரி மாவட்டத்தில் தோவாளை தாலுக்கா முழுவதும், அதுபோல கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைநகரமான நாகர்கோயில் நகரத்திற்கும், இலட்சக்கணக்கான உல்லாசப் பயணிகள் வந்து போகும் கன்னியாகுமரி நகரத்திற்கும் சுசீந்திரம் போன்ற ஊர்கள் இருக்கும் அகஸ்தீஸ்வரம் தாலுக்கா முழுவதற்கும் தடையின்றிக் குடிநீர் விநியோகிக்கப்படுவதோடுகூட, உலக்கையருவியின் பக்கத்திலுள்ள இடங்களி லெல்லாம் உல்லாசப் பிரயாணிகள் வந்து கண்டு களிக்கின்ற இயற்கை வனப்புகள் அமைந்திருப்பதால் அந்தத் திட்டத்தின் ஆய்வு எப்பொழுது தொடங்கப்படும். எப்பொழுது முடிவடையும் என்பதையும், அதோடுகூட இந்த வருஷத்திலேயே அந்தத் திட்டத்திற்கு ஏதாவது நிதி ஒதுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏப்ரல் மாதத்திற்குள்ளாக ஆய்வு வேலைகள் தொடங்கப்படும். நான்கைந்து மாதங்களுக்குள் ஆய்வு வேலை முடிவுறும். அது முடிந்த பிறகு அதற்கான தக்க ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் இன்றைக்கு நாகர்கோயிலிலுள்ள தண்ணீர் பஞ்சத்தைத் தவிர்ப்பதற்கு வழிவகை இருக்கிறது என்ற கருத்து நிலவுகிறதே, அதையும் ஆலோசனையில் கொண்டு அதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த ஆய்வு நடைபெறும் நேரத்தில் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும், மாண்புமிகு இராஜாப்பிள்ளை அவர்களும் சொன்ன கருத்துக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு அந்த அளவிலே இதிலே இணைத்துச் செய்ய முடியுமா என்று யோசனை செய்து ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதனை வழங்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக எஸ்டிமேட் எடுக்கப்பட்டிருக்கிறதா? எஸ்டிமேட் தொகை என்ன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதன் ஆய்வே ஏப்ரல் மாதம்தான் தொடங்கப் பெறுகிறது என்று கூறியிருக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றிய ஆசிரியர்கள் மாற்றம்

*817 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் பரஸ்பர மாற்றத்தின் போது கமிட்டி அங்கத்தினர்களால் மாற்றப்பட்ட ஆசிரியர்கள் யாரேனும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அப்பீல் செய்ததின் பேரில் மீண்டும் மாற்றப்பட்டுள்ளனரா?

(இ) ஆம் எனில், எந்த மாவட்டத்தில்? எந்த ஒன்றியத்தில் இது நடந்தது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி மாவட்டம், கீழ்க்கண்ட வட்டாரங்களிலுள்ள ஆசிரியர்கள் தாங்கள் வேலை இடமாற்றம் செய்யப் பட்டதற்காக முறையீடு செய்துள்ளனர். அந்த வட்டாரங்களாவன—

(1) ஸ்ரீவைகுண்டம்.

(2) புதூர்.

(3) நாங்குனேரி.

(4) சேரன்மகாதேவி.

(5) பாளையங்கோட்டை.

(6) ஆலங்குளம்.

(7) வாசுதேவநல்லூர்.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, இந்த மாற்றமானது ஒரு ரெவின்யூ அதிகாரியின் தலைமையில் நடத்தப்படுகிறது. ஆண்டுக்கொரு தடவை நடத்தப்படுகிறது. அப்படியிருந்தும் இதுபற்றிக் கலெக்டரிடத்தில் அப்பீல் செய்தால் அந்த மாற்றத்தை அவர்கள் அலட்சியப்படுத்துவதுமாதிரி தோன்றுகிறது அல்லவா? ஆகவே இப்படி வருஷத்திற்கு ஒரு முறை மாற்றம் செய்தால் மீண்டும் அப்பீல் செய்வதற்கு வகை இல்லை என்ற ஆணையைப் பிறப்பிக்குமா?